எச்பி/திட/
பொது/02.

18.07. 2.

சுற்றறிக்கை இல. 03/02

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

கூட்டுறவுச் சங்கங்கள் மூலதனம் கொள்வனவு செய்தல், மூலதன செலவாகக் <u>கணிக்கப்படும் சொத்து திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கல்.</u>

கூட்டுறவுச் சங்கங்கள் தமது நோக்கங்களைத் துரிதமாக செயற்படுத்தவும், வியாபார நடவடிக்கைகளை இலகுபடுத்தவும், அசையும் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும், மற்றும் மூலதன செலவாக கணிக்கப்படும் சொத்துக்களை திருத்தம் செய்வதற்கும் பின்வரும் வரையறுக்கப்பட்ட உச்ச எல்லைக்குள் இத்தால் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

அ. ரூபா.100,000/- (ஒரு இலட்சம்) உச்ச எல்லைக்குள் அசையும் சொத்துக்களை கொள்வனவு செய்யவும், மூலதனச் செலவாகக் கணிக்கப்படும் சொத்துக்களை திருத்தம் செய்வதற்கும் அனுமதியினை உதவி ஆணையாளர்கள் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது.

ஆ. ரூபா.100,000/- (ஒரு இலட்சம்) உச்ச எல்லைக்கு மேல் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை ஆற்றுவதற்கு எனது முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவை தொடர்பான ஆவணங்கள் எனது அனுமதிக்கென முன்வைக்கப்படல் வேண்டும் என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

மேற்படி அனுமதிக்கான அங்கீகாரம் அசையும் சொத்துக்கள் மற்றும் மூலதனச் சொத்து திருத்தம் நடவடிக்கைகளுக்கு மட்டும் பொருத்தமுடையதாகும். சொத்துக்களின் விபர அட்டவணை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கொள்வனவு, திருத்த வேலைகளை செய்யும் போது 6/97 இலக்கம் கொண்ட 11.11.1997ந் திகதிய சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்ட உள்ளடக்கங்களையும், கூட்டுறவுச் சங்க விதி 48(1), 48(11) ஆகியவற்றின் ஏற்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(....02)

அட்டவணை.

| | |
|---|---|
| காணி<br>கட்டிடம்<br>இயந்திர உபகரணங்கள்<br>வாகனங்கள்:- லொறிகள், பேருந்துகள்<br>உழவு இயந்திரங்கள்<br>மோட்டார் வாகனங்கள்<br>மோட்டார் சைக்கிள்<br>போன்றவை.<br>ஆடம்பரப் பொருட்கள்:- உதாரணமாக<br>குளிர்சாதனப்பெட்டி | இவ்வகையான முதலீடுகளுக்கு எனது அனுமதி பெறப்படல் வேண்டும். |
| மிதிவண்டிகள்<br>தளபாட உபகரணங்கள்<br>தட்டச்சு இயந்திரங்கள்<br>அத்தியாவசிய மின் உபகரணங்கள் | ரூபா.100,000/- (ஒரு இலட்சம் வரை) உதவி ஆணையாளர் அனுமதி வழங்கலாம்.<br>ரூபா.100,000/- மேற்பட்ட கொள்வனவுகளுக்கு எனது அனுமதி பெறப்படல் வேண்டும். |

இ. சுப்பிரமணிய சர்மா,
க.அ.ஆணையாளரும்,
க.ச.பதிவாளரும்.(வகிமா)

/கிம.